### தலைநகரில் 114 மில்லி மீட்டர் மழை பெய்ததாலே

# திடீர் வெள்ளம்

## கோலாலம்பூர் மாநகர் மன்றம் விளக்கம்

கோலாலம்பூர், அக். 16- நேற்றுக்காலை தலைநகரின் பல பகுதிகளில் இடைவிடாது பெய்த கனத்த மழையால் பல இடங்களில் திடீர் வெள்ளம் ஏற்படுவதற்கு அப்போது பெய்த மழையின் அளவே காரணம் என கோலாலம்பூர் மாநகர் மன்றம் கூறியது.

மணிக்கு 60 மில்லி மீட்டர் அளவில் பெய்யும் மழையே அதிகமாகும். ஆனால் நேற்று தலைநகரில் மணிக்கு 114 மில்லி மீட்டர் அளவில் கனத்த மழை பெய்ததாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் கூறியது.

நேற்றுக் காலை8.30 மணி அளவில் தொடங்கிய கனத்த மழையைத் தொடர்ந்து பத்து, கிள்ளான், கோம்பாக் ஆகிய சாலைகளில் நீர்மட்டம் நிறைந்து சாலைகளில் வெளியேறியதைத் தொடர்ந்து தலைநகரில் உள்ள பல சாலைகள் வெள்ளத்தில் மூழ்கியதாகவும் அது தனது அறிக்கையில் கூறியது.

ஜாலான் பந்தாய் பாரு, ஜாலான் பார்லிமென்ட், ஜாலான் கினாபாலு, ஜாலான் மகாராஜா லேலா, ஜாலான் டிராவர்ஸ், ஜாலான் டாமன்சாரா, ஜாலான் லேடாங், ஜாலான் சிகாம்புட், ஜாலான் கெந்திங் கிளாங், ஜாலான் சுல்தான் அஸ்லான் ஷா, ஜாலான் சுல்தான் ஆகிய சாலைகளில் திடீர் வெள்ளம் ஏற்பட்டதாக அது கூறியது.

இதனைத் தொடர்ந்து சாலைகளில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தைச் சரி செய்வதற்கு கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் பணியாளர்கள் களத்தில் இறங்கியதாகவும் அது கூறியது. இதனைத் தொடர்ந்து நேற்றுக்காலை 10.45 மணி அளவில் அனைத்துச் சாலைகளும் போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டன.



ஆனால் ஜாலான் ரஹ்மாட் சாலையில் ஒருவழி தடம் மட்டுமே திறக்கப்பட்டிருந்தது எனவும் அந்த அறிக்கை கூறியது.